2005 மார்ச் 9]

125—

வணிக வளாகம்

***31453—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் தாட்கோமூலம் வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் புதிய வணிக வளாகம் கட்டும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மங்கையர் தினம். இந்த மாவுலகம் போற்றும் மங்கையர் திலகம், தமிழ் நாட்டின், தமிழ் மாநிலத்தின் மக்கள் தலைவி, இந்திய தேசத்தின் இரும்பு மங்கை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் சொல்லி, மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாராபுரம் தொகுதி மிகவும் தாழ்த்தப்பட்ட எளிய மக்கள், சிறு சிறு தொழில் முனைவோர் வாழும் பகுதி. அந்தப் பகுதியிலே தாட்கோமூலம் வணிக வளாகம் கட்டிக் கொடுத்தால் அவர்கள் முன்னேறுவதற்கு நல்ல வழியாக இருக்கும் என்பதால் இந்த நிதியாண்டிலாவது அரசு, வணிக வளாகம் கட்டிக்கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைமையிடங்கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பாட்டிற்காக வணிக வளாகங்கள் கட்டித் தரும் ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமது முந்தைய ஆட்சிக் காலத்தின்போதே கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தின்படி ஒரு மாவட்டத்திற்கு சராசரியாக 15

[2005 மார்ச் 9

வணிக வளாகங்கள் என 20 மாவட்டங்களுக்கு மொத்தம் 300 வணிக வளாகங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கட்ட ஆணையிட்டு 30 வளாகங்கள் உடனடியாக கட்டவும் உத்தரவு வழங்கினார்கள். ஒரு வணிக வளாகத்தில் 10 கடைகள் கட்டவும், ஒரு கடை ரூ.50,000 மதிப்பீட்டில் கட்டுவதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். வணிக வளாகம் கட்டத் தேவையான சுமார் 2000 சதுர அடி நிலத்தைச் சம்பந்தப்பட்ட பேரூராட்சி அல்லது நகராட்சி, தாட்கோவிற்கு இலவசமாக வழங்க வேண்டும். கடைகளுக்கான வாடகையில் 50 சதவிகிதம் பேரூராட்சி அல்லது நகராட்சிக்கு வழங்கப்படும். இந்த அடிப்படையில் மொத்தம் 22 மாவட்டங்களில் 713 கடைகள் கட்டப்பட்டன. இதில் 467 கடைகள் மட்டுமே ஏலத்தில் எடுக்கப்பட்டன. 49 கடைகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மீதி 197 கடைகள் காலியாகவே உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் 38 வணிக வளாகக் கடைகள் கட்டப்பட்டு, அவற்றில் 10 கடைகள் காலியாக உள்ளன. எனவே, மேலும் வணிக வளாகங்கள் கட்டத் தேவையில்லையென முந்தைய அரசு, 23-3-2000 அன்று முடிவு செய்து இத்திட்டத்தை நிறுத்தி விட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடத்தில் குறிப்பாக நகராட்சியோ அல்லது பேரூராட்சியோ 2000 சதுர அடி நிலப்பரப்பை தாட்கோவிற்கு வழங்கினால் கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சிவகாமி.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகராட்சி மிகுந்த நெருக்கடியுள்ள பகுதி. இருந்தாலும் அங்கே கால்நடைத் துறையைச் சேர்ந்த அலுவலகமும், ஆஸ்பத்திரியும் இருக்கிறது. அந்த இடம் 2000 சதுர அடி இருக்கும் என்று நினைக்கிறேன். அது மக்கள் நடமாடும் நல்ல பகுதி. அப்பகுதியை அரசு தேர்வு செய்து வணிக வளாகம் கட்டித் தருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடம் எந்தத் துறையை சேர்ந்தது என்று நன்றாக, தெளிவாகத் தெரிந்து, ஒருவேளை நகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருந்தால், நகராட்சி ஆணையர் மூலமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்த இடத்தை தாட்கோவிற்கு வழங்கினால், கண்டிப்பாகக் கட்டிக்கொடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2005 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதி, மடத்துக்குளம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கணியூர் சிறப்பு நிலை பேரூராட்சியிலே, பேரூராட்சி பகுதிக்குட்பட்ட பேருந்து நிலையத்திலே, தாட்கோ வங்கி மூலமாக கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கடைகள் இன்னும் வாடகைக்குப் போகாமல் உள்ளன. அந்தக் கடைகளை ஆதிதிராவிட மக்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்றுள்ளதால் யாரும் அதை ஏலத்தில் எடுக்காமல் உள்ளார்கள். அதை வேறு நபர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோமூலம் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வணிக வளாகங்கள் ஆதிதிராவிட மக்கள் பயன்பாட்டிற்குத்தான் பயன்படுத்த வேண்டும். அவர்கள்தான் பயனடைய வேண்டும். இருந்தாலும் அந்த இடங்களைக் கட்டும்போது அதிகமான அளவிற்கு மக்கள் நெருக்கமாக பழகக்கூடிய இடங்களைத் தேர்வு செய்து கட்டியிருந்தால் கண்டிப்பாக அது பயனுள்ளதாக அமையும். அந்த இடத்தைத் தேர்வு செய்கிறபோது கடந்த காலங்களில் இடம் இல்லாத காரணத்தால் ஏதாவது ஒரு இடத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். சம்பந்தம் இல்லாத இடம், பழக்கவழக்கம், மக்கள் நடமாடக்கூடிய இடமாக இல்லாத அப்படிப்பட்ட இடங்களில் கட்டிக் கொடுக்கப்படுவதால் அங்கே பயன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நிகழ்வு வராத அளவிற்குத்தான் அது பயனுள்ளதாக அமைய வேண்டும். மக்கள் பயன் பெறக்கூடிய திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றுதான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணும்கருத்துமாக, ஒரு திட்டத்தை அறிவித்தால் அதைப் பயன்பாட்டிற்குக் கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்; அதனால் பயனடைந்து மக்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்ற இலக்கை அடைய வேண்டுமென்கிற நோக்கோடுதான் இப்போது கவனமாகத் திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி செல்வி முருகேசன்.

[2005 மார்ச் 9

திருமதி செல்வி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணியெல்லாம் போற்றும் தங்கத் தாரகை, வாழ்நாள் சாதனையாளர், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். காங்கேயம் பேருந்து நிலையத்தில் தாட்கோமூலம் கட்டப்பட்ட 10 கடைகள் வாடகைக்கு விடப்படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அப்படியிருப்பின் அந்தக் கடைகளைச் சிறப்பு ஊராட்சியின் கட்டுப்பாட்டில் கொடுத்தாலாவது அவர்கள் அதை ஏலத்தில் வாடகைக்கு விடுவார்கள். காரணம், கடைகள் பூட்டியே இருப்பதால் பாழடைந்துவிடும். இதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதுபோன்ற கடைகள் எல்லாம் ஆதிதிராவிட மக்கள் பயன்பெற வேண்டுமென்கிற சீரிய நோக்கோடு, சிறப்பாக எடுத்த நடவடிக்கையின் மூலமாக ஈரோடு மாவட்டத்திலே புஞ்சைபுளியம்பட்டியிலே 8 கடைகளும், கவுந்தப்பாடியில் 10 கடைகளும், காங்கேயத்தில் 10 கடைகளும், நம்பியூரில் 10 கடைகளும் கட்டிக் கொடுக்கப்பட்ட இடங்களில், இப்போது கவுந்தப்பாடியில் மட்டும் காலியாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன காங்கேயம் பகுதியில் கட்டப்பட்ட 10 வணிக வளாகக் கடைகளும் இப்போது பயன்பாட்டில் உள்ளன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

126—

அரசுப் பேருந்து

***49834—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS